# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 12

## புலன்மொழி வளத்தேர்வு வாசித்தல்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார் நானூறு பாடல்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். இத்தொகுப்பில் நானூறு நான்கடிப்பாடல்கள் உள்ளன. நாலடியார்ப் பாடல்கள் பலரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். நாலடியாருக்கு தருமர், பதுமர், விளக்கவுரைகாரர் என்பவர்களது உரைகள் கிடைத்துள்ளன. நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா அமைப்பில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. நாலடியார்ப்பாடல்கள் திருக்குறளின் அமைப்பையும் பாகுபாட்டையும் முன்மாதிரியாகக் கொண்டு இயல்கள், அதிகாரங்கள் என அமைக்கப்பட்டுள்ளன. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரேயொரு தொகுப்பு நூலாகும்.

நாலடியாரின் தொடக்கமே செல்வம், இளமை, யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகிறது. உலகில் மாந்தர் எவ்வாறான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதைச் சிறப்பாக நாலடியார் உரைக்கிறது. நாலடியாரின் இறுதியிலுள்ள இரண்டு அதிகாரங்கள் வாழ்க்கைத்துணை நலம் பற்றிய கருத்துகளைக் கூறுகிறது. நாலடியார்ப் பாடல்களின் முதலிரண்டு அடிகளும் ஒரு கருத்தினை எடுத்துக்கூறும். அடுத்த இரண்டு அடிகளும் அதன் விளக்கமாக அமையும். காலத்துக்குக் காலம் மாறிவரும் அறக்கருத்துகள் நாலடியாரில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாமும் நல்ல அறநூல்களைத் தேடிக் கற்று அறவழியில் வாழ்வோம்.